Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 35/2022

**2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | நகராட்சியில் எலக்ட்ரீசியன் |
| பெயர் | - | பாபு | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | விக்டர்அந்தோணி | சமயம் | - | கிருத்துவர் |
| கிராமம் | - | தாய்முடி | வயது | - | 27 |
| சாதி | - | | | | |

**25.04.2024**

**(1-வது எதிரி ஆஜர், 2-வது எதிரி ஆஜரில்லை. 2-வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1. நான் வால்பாறை நகராட்சியில் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்ன நடந்தது என்று தெரியாது. சுமார் 1, 2 வருடங்களுக்கு முன்பு தாய்முடியில் உள்ள குமார் என்பவரிடன் டீக்கடைக்கு நானும், அன்பு என்பவரும் போனோம். குமாருக்கு தலையில் அடிபட்டு உட்கார்ந்திருந்தார்.

2. அப்புறம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து விட்டுவிட்டு நான் வீட்டிற்கு போய்விட்டேன். அவருக்கு யாரால் இது மாறி ஏற்பட்டது என தெரிந்துகொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 8.11.2020 அன்று மதியம் 3.30 மணியளவில் நானும் அன்பு என்பவரும் எங்கள் எஸ்டேட்டில் உள்ள வாசக சாலையின் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் எஸ்டேட்டை சேர்ந்த சக்திவேல் என்பவரின் மகன் சரத் மற்றும் சோலையார் எஸ்டேட்டை சேர்ந்த மணிகண்டன் ஆகியோர் வாசகசாலைக்கு வந்து குமாரிடம் சிகரட் கேட்டார்கள். அதற்கு குமார் சிகரட்

முடிந்துவிட்டது என கூறினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

2 உடனே சரத்தும், மணிகணடனும் ஆபாசமாக பேசி சிகரட்டே இல்லையே, பின்னர் என்ன மயித்துக்கு வாசக சாலை நடத்துகிறாய் எல்லோருக்கும் தருகிறாய் நாங்கள் கேட்டா மட்டும் சிகரெட் இல்லை என்கிறாய் என குமாரை திட்டி கீழே தள்ளிவிட்டு இருவரும் சேர்ந்து அங்கிருந்த நாற்காலியை எடுத்து அவரது மண்டையில் ஓங்கி அடித்துவிட்டு ஆபாசமாக பேசி உன்னை கொன்னுடுவேன் என மிரட்டிவிட்டு வாசகசாலையில் இருந்து ஓடிவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. இந்த வழக்கு பற்றி சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.